## 1. அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகளை மேம்படுத்துதல்

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரி, மதுரை அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரி ஆகிய சட்டக் கல்லூரிகளின் மாணவியர் விடுதிகள் மற்றும் கோயமுத்தூர் அரசு சட்டக் கல்லூரியின் மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** விடுதி ஒன்றிற்கு ரூ. 30 இலட்சம் வீதம், ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

2. **அரசு சட்டக் கல்லூரிகளின் நூலகங்களில் அதிவேக இணையதள வசதியுடன் கூடிய கம்பியில்லா மண்டலம் அமைத்தல்.**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** மதுரை, செங்கல்பட்டு மற்றும் வேலூர் அரசு சட்டக் கல்லூரிகளில் நூலகம் ஒன்றிற்கு ரூ.10 இலட்சம் வீதம், ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில், **அதிவேக இணையதள வசதியுடன் கூடிய கம்பியில்லா மண்டலம்** (wi-fi zone) அமைக்கப்படும்.

**3. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள இளநிலை சீர்மிகு சட்டப்படிப்புகளில் பயிலும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகையை நீட்டித்து வழங்குதல்**

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப்பள்ளியில், பி.ஏ.,எல்.எல்.பி (சீர்மிகு சட்டப்படிப்பு) பயிலும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் கல்விக் கட்டணச் சலுகை, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள பி.காம்.,எல்.எல்.பி (சீர்மிகு சட்டப்படிப்பு), பி.பி.ஏ.,எல்.எல்.பி (சீர்மிகு சட்டப்படிப்பு) மற்றும் பி.சி.ஏ.,எல்.எல்.பி (சீர்மிகு சட்டப்படிப்பு) ஆகிய இளநிலை சீர்மிகு சட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கும் நீட்டித்து வழங்கப்படும். இவ்வகையில், அரசுக்கு ரூ.45 இலட்சம் செலவினம் ஏற்படும்.